[20th November 1963

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை. நமது மாநிலத்தில் மாவட்ட ஹரிஜன நலக் குழுக்கள் ஏற்கனவே பணியாற்றி வருகின்றன. அவை கலெக்டர்களுக்கு ஹரிஜன நலம் பற்றி ஆலோசனை கூறுகின்றன.

(a) No Sir.

(b) Does not arise. But it may be mentioned that District Harijan Welfare Committees are already functioning in this State and they advise the Collectors on the welfare of Harijans.

Land Mortgage Banks

* 349 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to reduce the period from 23 years to 12 years for encumbrance certificate for taking loans in the Primary Land Mortgage Banks?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: ஆம். மத்திய நில அடைமான பாங்க் இதைக் குறித்து யோசித்து வருகிறது.

* 350 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that certain percentage has been fixed for the issue of loans in Primary Co-operative Land Mortgage Banks; and

(*b*) if so, the percentage fixed for the discharge of prior debts, and for the land improvement loans?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) ஆரம்ப நில அடைமான பாங்குகள் முந்திய கடன்களைக் கொடுத்துத் தீர்க்க 30 சதவீதக் கடன்களும் நில அபிவிருத்திக் காரியங்களுக்காக 70 சதவீதக் கடன்களும் கொடுக்க வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், நில அடைமான பாங்குகள் முன் கடன்களைத் தீர்க்க நிறுவப்பட்டது. அதில் 30 சதவீதம் கொடுத்தால் முன் கடன் தீர்க்கப் போதவில்லை. ஆகையால் அதை உயர்த்தவேண்டுமென்று அரசாங்கம் கருதுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நில அடைமான பாங்குகளின் நோக்கமே நிலத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்படவேண்டும் என்பது தான். அந்த முறையிலே தான் இந்த முடிவு செய்யப்பட்டது. 30 சதவீதம், 70 சதவீதம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.